# அரசாங்க சேவை ஆணைக்குழு

## இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இன் பதவிகளுக்கு நியமித்தல்

அரச உத்தியோகத்தர்களை விளைதிறன் மற்றும் வினைத்திறனுடன் சேவையில் ஈடுபடுத்துவதற்காக நாடளாவிய சேவைகளின் தரம் I இன் பதவிகளுக்கு மிகவும் பொருத்தமான உத்தியோகத்தர்களை அத்தரத்தின் உத்தியோகத்தர்களில் இருந்து தெரிவு செய்வதற்கு நியாயமானதும் வெளிப்படைத் தன்மையுடன் கூடியதுமான நடைமுறையொன்றினை தயாரிக்கும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 04/2023 இன் ஏற்பாடுகளின் படி, 2024.12.31 ஆம் திகதி வரை இலங்கை திட்டமிடல் சேவை தரம் I இன் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்காக இலக்கம் 1670/32 மற்றும் 2010.09.10 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவைப்பிரமாணக் குறிப்புக்கு இலக்கம் 2137/26 மற்றும் 2019.08.20 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 2224/20 மற்றும் 2021.04.21 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 34/2019 இன்படி இலங்கைத் திட்டமிடல் சேவை தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(நேர்முகப்பரீட்சைக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு, உண்மையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நிறுவனங்கள், மற்றும் 2024.12.31 ஆம் திகதி வரை ஏற்படுவதாக எதிர்வுகூறப்பட்ட வெற்றிடங்களின் பட்டியல் பொது நிர்வாக இணையதளத்தில் வெளியிடப்படுவதோடு நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்ளும் உத்தியோகத்தர்கள் மேற்கூறிய பதவிகளுக்கு தமது விருப்பத்தைத் தெரிவித்த ஆவணத்தை நேர்முகப் பரீட்சைக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.)

02. அதற்கான மாதிரி விண்ணப்பத்தை இணைப்பு I ஆக வெளியிடுவதோடு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தை நிறுவனத் தலைவர்கள் மூலம் 2024.04.26 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

03. உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 04/2023 இல் குறிப்பிடப்பட்டுள்ள நேர்காணல் வழிகாட்டல்களின்படி கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற

வேண்டியுள்ளதோடு அதன்போது கீழே கொடுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும். (மேலதிக தகவல்கள்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 04/2023 இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

| தொடர் இலக்கம் | பரப்பு | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| i. | மைய/ பிரதான திறன்கள் | 500 |
| ii. | அனுபவம் | 400 |
| iii. | மொழித்தேர்ச்சி | 100 |
| | மொத்த புள்ளிகள் | 1000 |

04. மேற்படி நேர்காணலில் வழங்கப்படும் புள்ளிகளின்படி தயாரிக்கப்படுகின்ற திறமைப் பட்டியலின் ஒழுங்கு மற்றும் உத்தியோகத்தர்களது விருப்பத்தைக் கருத்திற்கொண்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள், வெற்றிடம் நிலவும் பதவிகளுக்கு முழுநேர பதில்கடமை புரிதல் அடிப்படையில் நியமிக்கப்படுவர். ரீட் விண்ணப்ப இலக்கம் 207/2020 தொடர்பில் நிலவும் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையும்வரை இலங்கை திட்டமிடல் சேவை தரம் I இன் பதவிகளுக்கான நியமனங்கள் இந்நடைமுறைகளின் படி மேற்கொள்ளப்படுவதோடு இந்த பதில்கடமைக்கான நியமனத்தினை நிரந்தர நியமனமாக மாற்றுவது தொடர்பில் நீதிமன்ற நடைமுறைகள் நிறைவடைந்த பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஒப்பம்./பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு

திகதி : 2024.03.21

**இணைப்பு I**

**<u>இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இன் பதவிகளுக்கு முழுநேர பதில் கடமை புரிதல் அடிப்படையில் நியமிப்பதற்கான விண்ணப்பம்</u>**

**பகுதி I – விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.**

1. விண்ணப்பதாரரின் தனிப்பட்ட தகவல்கள்

   i. முழுப்பெயர் :
   ii. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
   iii. பிறந்த திகதி மற்றும் வயது:
   iv. தனிப்பட்ட முகவரி:
   v. தொலைபேசி இலக்கம்:
   vi. மின்னஞ்சல் முகவரி :
   vii. சேவையாற்றும் தரம் :
   viii. இ.தி.சே. தரம் III இற்கு நியமனம் பெற்ற திகதி:
   ix. இ.தி.சே. தரம் II இற்கு பதவி உயர்வுபெற்ற திகதி:
   x. பதவி :
   xi. தற்போது வகிக்கும் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி:
   xii. அமைச்சு :
   xiii. திணைக்களம் :
   xiv. ஏனைய தகவல்கள் (தேவையான ஏனைய தகவல்கள் இருப்பின் உள்ளடக்கலாம்)

2. சேவை விவரங்கள்

   i. பெற்றுள்ள சம்பளமற்ற / பகுதிச் சம்பள விடுமுறைகள்

| தொடர் இலக்கம் | விடுமுறை தொடங்கும் திகதி | விடுமுறை முடிவுறும் திகதி | மொத்த காலம் (வரு. மா.தி) | நோக்கம் | விடுமுறை வழங்குவதற்கு அடிப்படையாக அமைந்த தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

ii. ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பின்

| குற்றப் பத்திரத்தின் இலக்கம் மற்றும் திகதி | ஒழுக்காற்றுக் கட்டளை (இதுவரை வழங்கப்படவில்லையெனின் அது தொடர்பில் குறிப்பிடவும் ) | தண்டனை நடைமுறைப்படுத் தப்படும் திகதி (ஒழுக்காற்றுக் கட்டளை மூலம் தண்டனை வழங்கப்பட்டிருப் பின் மட்டும்) | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் பிரிவு 236 இன் I இன்படி திருப்திகரமான சேவைக்காலத்தினைக் கணக்கிடும்போது தவிர்க்க வேண்டிய காலம் | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் பிரிவு 236 இன் II இன்படி தர உயர்வுக்கு பொருத்தமற்ற காலம் முடிவுறும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

iii. அனுபவம்

நியமனத் திகதியில் இருந்து இது வரை சேவையாற்றிய சேவை நிலையங்கள் (கடமையைப் பொறுப்பெற்ற கடிதங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்க வேண்டும்)

| பதவி | அமைச்சு/ திணைக்களம்/ ஆணைக்குழு/ நிறுவனம் | காலப்பகுதி | | தொழிலின் தன்மை மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சுருக்கமான விளக்கம் |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

3. தரம் I இன் பதவியொன்றுக்கு நியமனம் பெறுவதற்கான தகைமைகள்

i. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

| வினைத்திறன்காண் தடைதாண்டல் | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட்டுள்ள திகதி | சலுகைக் காலம் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் அல்லது விடுவிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விவரங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

ii. விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முந்தைய 06 வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனிலும் உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருக்கின்றாரா என்பது தொடர்பிலானது

| வருடம் | செயலாற்றுகை மதிப்பீடு (திருப்தியற்றது/ திருப்திகரமானது/ சாதாரண மட்டத்தை விட உயர்வானது / மிகச் சிறப்பானது) |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

iii. விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு தரம் II இன் 06 சம்பளவேற்றங்களை ஈட்டியுள்ளாரா என்பது தொடர்பிலானது (அ.நி.சு 34/2019 இன் 2.2 இன்படி பதவி உயர்வு

பெறுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் தரம் II இன் 02 சம்பளவேற்றங்களைப் பெறல் தொடர்பான விவரங்களை உள்ளடக்குவது போதுமானது)

| வருடம் | சம்பளவேற்றங்களை ஈட்டியுள்ளார்/ ஈட்டவில்லை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

iv. பட்டப்பின் படிப்புத் தகைமைகளைப் பெறுவதற்கு ஏற்புடைய விவரங்கள் (பட்டப்பின் படிப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்)

| பட்டப்பின் படிப்பு | நிறுவனம் | காலப்பகுதி | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

மேற்படி தகவல்கள் அனைத்தும் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

..................................

திகதி

.......................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்
மற்றும் உத்தயோகபூர்வ முத்திரை

**பகுதி II - நிறுவனத் தலைவரினால் நிரப்பப்பட வேண்டும்.**

1. விண்ணப்பதாரரால் மேலே 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அவரது தனிப்பட்ட கோப்பிற்கிணங்க உண்மையானவை என்றும் விண்ணப்பதார் சேவையின் தரம் II இல் 06 வருடங்கள் (அ.நி.சு 34/2019 இன் 2.2 இன்படி பதவி உயர்வு பெறுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்வதாயின் 02 வருடங்கள் ) முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலமொன்றை பூர்த்திசெய்துளார் / பூர்த்திசெய்யவில்லை* எனவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க ஒழுக்காற்றுத் தண்டனைகளைப் பெற்றுள்ளார்/ பெறவில்லை* எனவும் விண்ணப்பதாரருக்கு எதிராக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவில்லை* எனவும் ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கை எடுக்க கருதப்படுகின்றது / கருதப்படவில்லை* எனவும் அவர் விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு தரம் I இற்கு பதவி உயர்வுபெறுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார்/ பூர்த்தி செய்யவில்லை* எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அல்லது அவ்வாறு எடுக்க கருதப்படுவதாயின் விவரங்களைக் குறிப்பிடவும் : ..........................................................................................

……………………………………………………………………………………………………………

2. விண்ணப்பதாரரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் உரிய ஆவணங்களைப் பரீட்சித்த பின்னர் சரியானவை என சான்றுப்படுத்துகின்றேன். மேலும், விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவர் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து பின்வருனருடன் / இன்றி* விடுவிக்க முடியும் / முடியாது* என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

3. விண்ணப்பதாரரின் பணி, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமாக / திருப்தியற்றதாக* இருப்பதால், வெற்றிடம் நிலவும் இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இன் பதவிக்கு இந்த விண்ணப்பதாரரை நியமிக்க பரிந்துரைக்கிறேன் / பரிந்துரைக்கவில்லை.*

பரிந்துரைக்கவில்லை என்றால் காரணம் சுருக்கமாக : ..................................................................

| | |
|---|---|
| .................................. | .................................................................... |
| திகதி | நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை |

**பகுதி III - உரிய அமைச்சின் செயலாளரினால் நிரப்பப்பட வேண்டும்.**

திரு / திருமதி / செல்வி* ................................................................ இன் விண்ணப்பத்தை பரிந்துரை செய்கிறேன்/செய்யவில்லை* என்பதோடு மேலே பகுதி II இல் நிறுவனத் தலைவரின் வெளிப்பாடுகளுடன் நான் உடன்படுகிறேன்/ உடன்படவில்லை.*

.................................... ......................................................................

திகதி

அமைச்சின் செயலாளரது கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

* தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்